## தேசிய கைப்பணிகள் மன்றம் - 2016

இலங்கை கைப்பணிகள் மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்றத்துடன் இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கைப்பணிகள் மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் உறுப்புரைக்கமைய பயன்பாட்டிற்குள்ளாக்கப்பட்டதிலிருந்து சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் ரூபா 13,111,983 பெறுமதியான பயன்பாட்டிலுள்ள நிலையான சொத்துக்களுக்கு தேசிய கைப்பணிகள் மன்றம் 2016 ஆம் ஆண்டிற்காக பெறுமானத் தேய்விட்டிருக்காததுடன், 2016 ஆம் ஆண்டில் 03 வாகனங்கள் ரூபா 28,000,000 ஆக இருக்க வேண்டும் எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டு நியமங்கள்

அரச மானியங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 121,331,961 பெறுமதியான நடைமுறையல்லாச் சொத்துக்கள் ஆண்டு தோறும் பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும், மூலதன மானியங்களின் கணக்கீட்டிற்கு கணக்கீட்டு நியமமொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான 02 அரச வங்கி நடைமுறைக் கணக்குகளின் இனங்காணப்படாத வைப்புக்கள் ரூபா 468,968 தொகை தொடர்பிலும், மற்றும் ரூபா 53,587 தொகையான இனங்காணப்படாத செலவுவைத்தல்களையும் இனங்கண்டு கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நேரடிவைப்புகள் மற்றும் 02 வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பில் தீர்க்கப்படாத வைப்புகள் முறையே ரூபா 52,320 மற்றும் ரூபா 2,500 தொகைகளை இனங்கண்டு மற்றும் கணக்கிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்னிலைப்படுத்தல் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் காரணமாக, அவற்றின் சரியானதன்மை தொடர்பில் கணக்காய்வில் கேள்விக்குரியதாகக் காணப்படுகின்றது.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,472 மீதியினைக் கொண்டுள்ள அரச வங்கி நடைமுறைக் கணக்கொன்றிற்கு வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பல ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கைகளும் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன் நிதிக்கூற்றுக்களிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

(ii) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொதுப் பேரேட்டில் உள்ளடக்கப்பட்ட 13 பேரேட்டுக் கணக்குகள் தொடர்பில் ரூபா 4,064,541 கூட்டுத்தொகையான மீதிகள் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்காத அதேவேளை, பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 8,158,242 கூட்டுத்தொகையான கணக்கு மீதிகள் பேரேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணிப்பீட்டுப் பிழைகள் காரணமாக, 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கணக்குகளில் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ரூபா 60,499 தொகையொன்றினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் முன்னைய ஆண்டின் ரூபா 946,883 தொகையொன்றின் வழுக்கள் தொடர்பான திருத்தம் திரண்ட நிதியக் கணக்கிற்கு சரிசெய்யப்பட்டிருந்ததுடன், செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசுப் பாய்ச்சலினை கணிப்பிடுகையில் மீளாய்வாண்டின் காசுப் பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட்டிருந்தது.

(உ) பணமாக்கலுக்கு சமர்ப்பிக்கப்படாத 04 காசோலைகள் விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும், அது முன்னைய ஆண்டின் மேலதிகம் அல்லது பற்றாக்குறைக்கு சரிப்படுத்தப்பட்டிருக்க வேண்டியதுடன் ரூபா 170,118 கூட்டுத்தொகையான இனங்காணப்படாத பெறுகைகள் வருமானக் கூற்றிற்கு இனங்காணப்படாத பெறுகைகளாக இருக்கக்கூடியதாக சரிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஊ) தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணங்கள் தொடர்பில் தொடர்புடைய உத்தியோகத்தர்களின் சம்பளங்களிலிருந்து மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட ரூபா 75,950 தொகையான பணங்கள், காசு முற்பணங்களின் தீர்ப்பனவுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதற்கு பதிலாக ஏனைய வருமானமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(எ) பொல்கலவிலுள்ள பயிற்சி நிலையத்தின் அபிவிருத்திக்கு அமைச்சிடமிருந்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 713,405 தொகை பெறப்பட்டிருந்ததுடன், அந்த தொகையினை செலவழிப்பதன் மூலம் பெறுமதியான மூலதன உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இது நிதிச் செயலாற்றல் கூற்றில் முறையே மீண்டெழும் பெறுகைகள் மற்றும் மீண்டெழும் செலுத்துகைகளாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் சனவரி 01 இல் கட்டிடமொன்றிற்கு ரூபா 3,699,744 தொகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் நிர்மாணம் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் தற்போது பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றதுடன், மூலதனமாக்கப்படாது நடைமுறை வேலையாக கணக்கிடப்பட்டிருந்ததுடன், அவற்றின் மீதான பெறுமானத்தேய்வும் தவிர்க்கப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள பேரேட்டுக் கணக்குகளின் படி நானாவித முற்பண கணக்குகளின் மீதி ரூபா 499,931 தொகையாகக் காணப்பட்ட போதிலும், முற்பணங்களின் பட்டியலின்படி அந்த மீதி ரூபா 588,210 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், ரூபா 88,279 ஆன வித்தியாசமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

(ஆ) நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 09 நிலையான சொத்துக்களின் கணக்குகள் தொடர்பான கணக்குகளின் ஒப்பீட்டில் ரூபா 68,608,465 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

ரூபா 38,531,237 கூட்டுத்தொகையான பெறுமதியுடன் தொடர்புடைய இலக்கம் 332 தொடக்கம் 343 வரையான நாளேட்டுப் பதிவுகளின் சரியான தன்மையினை மெய்மையாய்வதற்கு எவ்வித ஆதரவான சான்றுகளும் காணப்படாததுடன், அந்த நாட்குறிப்பு பதிவுகளுடன் அல்லது தனித்தனியாக கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள ரூபா 8,204,379 தொகையான வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மொத்த மீதிகளில், 3 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 2,579,538 தொகையாகக் காணப்பட்டது. இந்த கடன் மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள ரூபா 4,926,862 தொகையான வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டிய மொத்த மீதிகளில், 1 இலிருந்து 2 வருடங்கள் வரையான கடன் மீதிகளின் மொத்தம் மற்றும் 3 வருடங்களுக்கு மேற்பட்ட கடன் மீதிகளின் மொத்தம், முறையே ரூபா 2,501,593 மற்றும் ரூபா 2,425,269 தொகையாகக் காணப்பட்டதுடன், அவ் மீதிகளினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் ஏனையவைகளுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணங்கள் 115, 217 மற்றும் 218 | மீளாய்வாண்டில் ரூபா 763,735 கூட்டுத்தொகையொன்றான 29 பற்றுச்சீட்டுக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களின் உறுப்புரையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 138(6) | பணம் வழங்கியமைக்கான சான்றுபடுத்தக் கூடிய ஆதாரமான ஆவணங்களின்றி ரூபா 820,181 ஆன பெறுமதியான 15 உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் பணம் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 138 மற்றும் 245(ஐ) | சான்றுபடுத்தலின்றி ரூபா 3,712,668 கூட்டுத்தொகையான 15 பண உறுதிச்சீட்டுக்கள் தொடர்பில் பணம் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன |
| (iv) | நிதிப்பிரமாணம் 371(2) | ‘‘செயல்நிமித்த’’ உபகட்டுநிதி அது வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவுற்றதும் உடனடியாக தீர்க்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 1996 தொடக்கம் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்ட ரூபா 316,227 கூட்டுத்தொகையான முற்பணங்களினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிகள் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 757 | நிலையாக சொத்துக்களின் மதிப்பாய்வொன்று நடாத்தப்பட்டு அவற்றின் அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் 2017 யூன் வரை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் முற்பணக் கணக்கில் காணப்பட்ட ரூபா 326,857 தொங்கல் கணக்கு மீதி தீர்க்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பிலான அதிகாரம் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) பொல்கொலவிலுள்ள கைப்பணிகள் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கு மீளாய்வாண்டில் ரூபா 4,569,360 தொகையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2016 திசெம்பர் 29 வரை அமைச்சினால் ரூபா 2,764,104 தொகையொன்று மீள்நிரப்பப்பட்டிருந்தது. ஆகையினால், ஏனைய அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் பெறப்பட்ட ரூபா 1,805,256 தொகையொன்று, அந்த செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அவற்றிற்கு முறையானதொரு அங்கீகாரமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், முன்னைய ஆண்டிற்கான ரூபா 12,226,762 ஆன பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 2,122,880 ஆன பற்றாக்குறையொன்றானமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 10,103,882 ஆன முன்னேற்றமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது. அரச நடைமுறை மானியங்கள் ரூபா 9,432,300 தொகையொன்றினால் அதிகரித்தமை குறிப்பிட்ட முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிசார் பற்றாக்குறைகள் வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது, 2012 ஆம் ஆண்டில் தேசிய கைப்பணிகள் மன்றத்தின் பங்களிப்பு ரூபா 49,657,039 ஆகக் காணப்பட்டதுடன் அது தொடர்ந்து அதிகரித்து, மீளாய்வாண்டின் போது ரூபா 134,641,679 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1982 இன் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிகள் மன்றம் மற்றும் இணைந்த நிறுவனங்கள் அதிகாரச்சட்டத்தின் 17 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் படி, மேம்படுத்தலில் உதவியளித்தலும் ஆலோசனை கூறுதலும், கைப்பணிகளின் அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல், கைவினைப் பொருட்களின் விரிவாக்கம் மற்றும் தரத்தின் முன்னேற்றம் மற்றும் பூர்த்திசெய்யப்பட்ட வகைகளின் நியமங்கள், நிலையங்களினை நிறுவுதல், பேணுதல் மற்றும் செயற்படுத்தல், கைவினைஞர் பயிற்சியின் நோக்கத்திற்கு பயிற்சிப் பட்டறைகள் மற்றும் ஏனைய நிறுவனங்கள், இலங்கை மற்றும் வெளிநாட்டிலும் கண்காட்சிகளினை நடாத்துதல் மற்றும் கைவினைஞர்களின் உற்பத்திகளின் முன்னேற்றத்திற்கு தேவைப்படுகின்ற மூலப் பொருட்களினை வழங்குதல், என்பன சபையின் பிரதான நோக்கங்களாகும்.

மேற்குறித்த நோக்கங்களினை நிறைவேற்றுவது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஐந்து வருட காலத்தின் போது சபையினால் நடாத்தப்பட்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்கையில், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையும் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் கிரமமாக அதிகரித்திருந்தது. இருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையும் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2016 ஆம் ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையும் பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் முறையே 25.6 சதவீதத்தினாலும் மற்றும் 29.9 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் பயிற்சி நிலையங்களினால் முழு நேரமாக பயிற்சி பெற்ற தொழில் பயிலுனர்களின் எண்ணிக்கை 668 ஆக காணப்பட்ட அதேசமயம், 2016 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 740 ஐ அடைந்திருந்ததுடன் 72 சதவீதமாக அதிகரித்திருந்தது.

(இ) 2012 தொடக்கம் 2015 ஆம் காலப்பகுதியின் போது சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், போட்டிகள் மற்றும் கண்காட்சிகள் நடாத்துவதில் முன்னேற்றமொன்று காணப்பட்டது. எவ்வாறாயினும், 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, மீளாய்வாண்டில் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவது 26 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய, பொகெல்ல கைத்தறி ஜவுளி செயற்திட்டத்தினை முன்னேற்றும் செயற்திட்டத்திற்கு ரூபா 4,500,000 தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 4,569,360 தொகையான செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் பௌதீக முன்னேற்றம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் வெளிநாட்டு பயிற்சியுடன் கைவினைஞர் ஒருவரை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு செலவழிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டின் போது கைவினைஞர்க்கு எவ்வித வெளிநாட்டு பயிற்சிகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பொல்கொடயில் அமைந்துள்ள காட்சியறையினை நவீனமயப்படுத்துவதற்கு திட்டத்தைக் கொண்டிருந்ததுடன், அவற்றிற்கு ரூபா 1,000,000 தொகையொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், மீளாய்வாண்டின் போது ரூபா 382,000 தொகையொன்று மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததனால் 38 சதவீதமான நிதிசார் செயல்முன்னேற்றமொன்றினை சுட்டிக்காட்டுகின்றது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2009 சனவரி 08 ஆந் திகதிய அமப/08/2322/349/015 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, முன்னைய இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபையின் கீழ் நாடாளாவிய ரீதியில் அமையப்பெற்ற 131 எண்ணிக்கையான கைவினைஞர் பயிற்சி நிலையங்கள் மற்றும் அதனுடன் சேர்ந்த ஆதனங்கள் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், சட்டரீதியாக கையேற்பதற்கு மற்றும் அந்த பயிற்சி நிலையங்களின் 129 காணிகள் மற்றும் கட்டிடங்களினை கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

(ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(2) பிரிவின் உறுப்புரைக்கமைய, அரசினால் கையேற்கப்பட்ட அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிறுவனங்களின் கணக்காய்வு கட்டணம், தொடர்புடைய அமைச்சர் மற்றும் நிதியமைச்சின் ஒருமைப்பாட்டுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு செலுத்தப்படல் வேண்டும். ஆயினும், 2016 திசெம்பர் 31 இல் செலுத்தவேண்டிய ரூபா 1,951,294 தொகை கணக்காய்வுக் கட்டணத்தினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூர் போக்குவரத்து செலவினங்கள், அச்சிடல் கிரயங்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் செலுத்துகைகள் ஆகிய 03 நோக்க விடயங்களுக்கு மீளாய்வாண்டிற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளில் மிகை செலவினங்கள் ஏற்பட்டமையினால், குறிப்பிடப்பட்ட செலவினங்களின் முதல் எல்லையின் மிகைகள் முறையே 209 சதவீதம், 374 சதவீதம், மற்றும் 134 சதவீதமாக பணிப்பானர்கள் சபையினால் திருத்தியமைக்கப்பட்டிருந்தன.

(ஈ) கைவினைஞர் கிராமங்கள் அபிவிருத்தி செயற்திட்டங்களின் பாவனைக்கு மீளாய்வாண்டில் ரூபா 2,546,040 பெறுமதியான தையல் இயந்திரங்கள், காலினால் இயக்கப்படும் குயவர்களின் சக்கரங்கள் மற்றும் களிமண் பதனம் செய்யும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டதிலிருந்து 06 மாதங்களுக்கும் மேலதிகமான காலப்பகுதியொன்று கடந்திருந்த போதிலும், கைவினைஞர்களுக்கிடையே அந்த பொருட்களினை பகிர்ந்தழிப்பதற்கு 2017 யூன் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கைப்பணிகள் சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற சிகிரியா கைப்பணிகள் கிராமத்தின் 03 கட்டிடங்கள் மற்றும் 11 விற்பனைக் கூடாரங்கள், இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலமொன்றிற்கு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2015 யூன் 09 இல் தற்காலிக அடிப்படையில் தேசிய கைப்பணிகள் சபைக்கு கிராமிய பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் 02 வாகனங்கள் விடுவிக்கப்பட்டதுடன், விடுவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஓட்டத்திற்கு பொருத்தமற்றதாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன் தலைமை அலுவலகத்தின் வளாகத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) தச்சனிடம் கொடுப்பதற்கு 2007 தொடக்கம் 2010 காலப்பகுதியில் அமைச்சின் ஏற்பாடுகளிலிருந்து ரூபா 13,218,660 பெறுமதியான 97.92 கிலோகிராம் தொகை வெள்ளி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றிற்கு தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. 2017 சனவரி 18 ஆந் திகதிய என்சிசி/பீசி/2017/01/04 ஆம் இலக்க சபை தாளிற்கமைய, அரிதான கூறுகள் முகாமைத்துவத்தின் கீழ் தட்டான்களிடையே குறிப்பிடப்பட்ட வெள்ளி இருப்பை விநியோகிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், 2017 மே 31 வரை அது தொடர்பில் அவற்றிற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 02 அரச வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 179,864 தொகையான வங்கி மீதியொன்று காணப்பட்டதுடன், அவற்றில் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படாது தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 4.4 முறைப்படி கையேற்கப்படாத காணிகள்/ ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

கைப்பணிகள் மன்றத்திற்கு சட்டரீதியான உரிமையைக் கொண்டிராத கல்வி அமைச்சிற்கு சொந்தமான பொல்கொல்ல புடவைகள் செயற்திட்டத்தின் வளாகத்தில் அமைந்துள்ள மத்திய மாகாண செயற்திட்ட வளாகத்தின் பழுதுபார்த்தலுக்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,191,324 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கைப்பணிகள் மன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 262 ஆகக் காணப்பட்ட அதேவேளை உண்மையான பதவியணியினர் 234 ஆகக் காணப்பட்டது. சிரேஷ்ட நிலையில் 03 பதவிகளும், இரண்டாம் நிலையில் 01 மற்றும் மூன்றாம் நிலையில் 30 பதவிகளும் தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்பட்டன. மூன்றாம் நிலையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 21 ஆகக் காணப்பட்டது, ஆனால் உண்மையான பதவியணியினர் 27 ஆகக் காணப்பட்டமையினால் 06 ஊழியர்களின் மிகையொன்றினைக் கொண்டுள்ளது.

(ஆ) கணக்குகள் மற்றும் கொள்வனவு உத்தியோகத்தர் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தர் 2014 பெப்ரவரி மாதத்தில் சேவையிலிருந்து இராஜினமாச் செய்திருந்த போதிலும், அந்தப் பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 கொள்வனவு மற்றும் ஒப்பந்த செயன்முறைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு நடைமுறையினைப் பின்பற்றாது மீளாய்வாண்டின் போது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 461,999 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் பெறப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட கைவினைப் பொருட்களின் கண்காட்சிக்கு பொருட்கள் சேவைகளின் கொள்வனவின் போது அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் உதவி பெறப்பட்டிருக்கவில்லை. பதிலாக, ஊடக மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கு நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்றின் பரிந்துரைகளின பேரில் ரூபா 3,264,237 பெறுமதியான பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறுகைகள் வழிகாட்டியின் 2.14.1 ஆம் வழிகாட்டல், 2006 தேசிய பெறுகைகள் முகவரின் 08 ஆம் இலக்க மற்றும் 2014 யூலை 04 ஆம் திகதிய 28 ஆம் இலக்க பெறுகைகள் வழிகாட்டியின் பிற்சேர்க்கையின் படி, அழைப்பிற்கு பின்னர் 03 க்கு குறையாத மூடப்பட்ட விலைமனுக்களிலிருந்து விநியோகஸ்தர் தெரிவு தெரிவு செய்யப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 2016 தேசிய கைவினைப் போட்டி மற்றும் கண்காட்சி தொடர்பில் ரூபா 2,681,575 பெறுமதியான பொருட்கள் மற்றம் சேவைகளின் கொள்வனவுக்கு மஞ்சள் பக்கங்களினூடாக விலை மனுக்கள் அழைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பெறப்பட்ட 03 விலை மனுக்களில் 02 திருப்பியனுப்பப்பட்டிருந்ததுடன், மீண்டும் கேள்விதாரர்களினை அழைக்காது தனியார் கம்பனியொன்றுக்கு பெறுகை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 06 நோக்க விடயங்கள் தொடர்பில் ஏற்பாடுகள் மற்றும் உண்மைகளுக்கிடையே 36 சதவீதத்திலிருந்து 194 சதவீதம் வரை விலகல்களின் வீச்சு அவதானிக்கப்பட்டது. மேலும், மூலதன செயற்திட்டமொன்று தொடர்பில் ஏற்பாடுகளினை மிகைத்து 844 சதவீதத்தினால் செலவினம் காணப்பட்ட அதேவேளை, மூலதன நோக்க விடயமொன்றுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் 100 சதவீதத்தினால் சேமிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், நிதிக்கட்டுப்பாட்டின் வினைத்திறன் வாய்ந்த கருவியொன்றாக பாதீடானது பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

கைப்பணிகள் மன்றத்தின் கைப்பணிகள் கிராம வளாகத்திற்கான நுழைவினை வழங்குவதற்கு ரூபா 1,152,902 கிரயமொன்றில் 2012 ஆம் ஆண்டில் மரத்திலான பாலம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது திறக்கப்படுவதற்கு முன்னரே மற்றுமொரு அபிவிருத்தி நோக்கத்திற்கு நீக்கப்பட்டிருந்தது. இந்த சொத்தினை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிசார் கட்டுப்பாடு | பெறவேண்டிய மீதிகள் அறவிடப்பட்டமை, விளைவற்ற வங்கி கணக்குகள் பேணப்படுகின்றமை மற்றும் வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிப்பில் தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகளைக் கொண்டுள்ளமை. |
| (ஆ) நிலையான சொத்துக்களின் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை மற்றும் மதிப்பாய்வுச் சபையினை நியமிப்பதில் மற்றும் மதிப்பாய்வினை நடாத்துவதில் தாமதங்கள் |
| (இ) களஞ்சியங்களின் கட்டுப்பாடு | களஞ்சிய மூலப்பொருட்கள் மற்றும் காட்சிபடுத்தப்பட்ட இருப்புக்களினை நாளதுவரையாக்க தவறியமை |
| (ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | வருமதியாகவுள்ள கடன் மீதிகளினை அறவிடாமை மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |